1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற முட்டைகளைவிட தேவை அதிகமாகின்ற சூழ்நிலை வருகின்ற நேரத்தில் அரசு அவசியம் இதைப் பற்றிப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 248, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

248——

பர்கூர் தொகுதியில் தோட்டக்கலை வேளாண்மைக் கல்லூரி ஆரம்பித்தல்.

*20128—திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதியில் தோட்டக்கலை தொடர்பான வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு வேளாண்மைக் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் பெரியகுளம் மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு தோட்டக்கலைக் கல்லூரிகள் இயங்கி வருவதாலும், கடந்த சில ஆண்டுகளாக தோட்டக்கலை பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதாலும் தமிழ்நாட்டில் எங்கும் தோட்டக்கலை தொடர்பான வேளாண்மைக் கல்லூரி துவங்கும் வாய்ப்பு தற்பொழுது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தமிழகத்திலே பின்தங்கிய மாவட்டமாக இன்றைக்கு இருக்கிறது. அங்கு படித்தவர்களுடைய சராசரி 47 விழுக்காடு, இந்த மாநிலத்தினுடைய படித்தவர்களுடைய சராசரி 67 விழுக்காடு. ஆகவே கல்வியிலே பின்தங்கி இருக்கின்ற அந்த மாவட்டத்தை அனைத்து துறைகளிலும் கல்வியிலே முன்னேற்றவேண்டும் என்பதற்காக இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த தர்மபுரி மாவட்டத்திற்கு பல கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள்: பள்ளிக்கூடங்களைக்

கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல இந்தத் துறையிலும்—ஏறக்குறைய தமிழகத்தில் விளைகின்ற தோட்டக்கலை பயிர்களான மா, திராட்சையில் 75 விழுக்காடு இன்றைக்கு தர்மபுரியிலே விளைகின்றது; ஆகவே அதிகமாக விளைகின்ற அந்த மாவட்டத்திற்கு அடுத்த ஆண்டாவது—கல்லூரி கொடுப்பதற்கு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட மாவட்டமாக தர்மபுரி மாவட்டம் இருப்பதால்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, அந்த மாவட்டத்தை தத்து எடுத்து தானே நின்று, வெற்றியும் பெற்று, பல்வேறு வசதிகளை அந்த மாவட்டத்திற்கு தந்துக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்படுகின்றபொழுது, நிதிநிலைமைக்கு ஏற்றவாறு அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே மிகப் பெரிய விவசாய ஆராய்ச்சி மையம் பையூரில் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்போல மா, திராட்சை போன்றவைகள் தர்மபுரி மாவட்டத்திலே பர்கூர் தொகுதியிலே மிக அதிகமாக விளைகிறது. அங்கிருக்கிற நிலங்களில் 75 விழுக்காடு மா தான் பயிர் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான முறையிலே பூச்சி மருந்துகளும் மற்றவைகளும் கொடுப்பதற்கு — அவர்கள் நல்ல ஒரு கல்வி அறிவு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே குறைந்த பட்சம் டிப்ளோமா வகுப்பு என்று சொல்வார்களே, அதையாவது இந்த தோட்டக் கலையிலே ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே தோட்டக் கலைப் பயிர்களான மா, திராட்சை, கொய்யா, மாதுளை போன்றவைகள் அதிகமாக விளைகின்றன. விளைகின்ற பொருட்களைப் பதப்படுத்தி, அதிக லாபம் தரக்கூடிய வகையிலே விவசாயிகள் விற்பதற்கு அனைத்து வசதிகளையும் அரசு செய்ய இருக்கிறது. எனவே அங்கு புதிதாக டிப்ளோமா கோர்ஸ் ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 249, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

249—

பரமக்குடியில் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் காய்கறித் தோட்டம் ஏற்படுத்துதல்.

***20383—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம். பரமக்குடியில் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவியுடன் காய்கறித் தோட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு திட்டம் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உழவர் பயிற்சி நிலையம் 19 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் 5 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. இங்கு பழப்பண்ணையும் இருக்கிறது. வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்தில் குறைந்த நீர்வளம் உள்ள இம்மாவட்டத்தில் காய்கறி தோட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், அந்தக் காய்கறி தோட்டக் கலையில் மகளிருக்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, டானிடா திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே தோட்டக்கலைக்கு பயிற்சி கொடுக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாவட்டத்தில் 1.20 லட்சம் செலவில் பழ மரங்கள் வளர்க்கும் திட்டத்தின் கீழ் 200 ஏக்கர் பரப்பளவில் பழக்கன்றுகள் 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. அரசு தோட்டக் கலை பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 6.50 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. பழப்பயிர் சாகுபடிக்கு வேண்டிய கடன் உதவியும் 25 முதல் 50 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. இவைகள் எல்லாம் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பெற்று காய்கறித் தோட்டங்கள் அமைப்பதற்கும், பழத் தோட்டங்கள் அமைப்பதற்கும் முன்வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.